# முன்னோர்கள் வகுத்த 40 வகை மழைகள் அறிவீர்களா???
## மழைகளின்வகைகள்

1. ஊசித் தூற்றல்
2. சார மழை (ஊதல் காற்றோடு கலந்து பெய்யும் நுண்ணிய மழை)
3. சாரல்
4. தூறல்
5. பூந்தூறல்
6. பொசும்பல்
7. எறிதூறல் (பொடிக் கற்களால் மேலே எறிவது போன்ற தூறல்)
8. தூவானம்
9. பொடித்தூறல்
10. ரவைத்தூறல்
11. எறசல்
12. பறவல்மழை
13. பருவட்டு மழை (மேலெழுந்த காற்றோடு)
14. அரண்ட பருவம் (தேவைக்குக் காணாத மிகச் சொற்பமான மழை)
15. உழவுமழை
16. துணைமழை (முதல் மழையைத் தொடர்ந்து மறுநாளோ அதுக்கும் மறுநாளோ பெய்வது)
17. பேய் மழை
18. நச்சு மழை (இடையில்லாமல் தொடர்ந்து பெய்துகொண்டேயிருப்பது)
19. வதி மழை (பூமியெல்லாம் சேறு ஆகும்படியாக)
20. கல் மழை (ஆலங்கட்டி மழை)
21. காத்து மழை (காற்றும் மழையும் கலந்து பெய்வது)
22. சேலை நனைகிறாப்புல
23. கோடை மழை
24. கால மழை
25. தக்காலம் (மழைக்காலம்)
26. பாட்டம் பாட்டமாய் (விட்டுத் தொடர்ந்து)
27. நீரூத்து மழை (தரையிலிருந்து நீர்கசிந்து வெளியேறிக் கொண்டேயிருக்கும் படியாகப் பெய்யும் தொடர் மழை)
28. வெக்கை மழை (சூட்டைக் கிளப்பி விடும்படியான இது பூமியைச் சாந்தி பண்ணமுடியாத மழை)
29. அட மழை (அடை மழை)
30. மாசி மழை ( விவசாயிகளுக்கு உகந்த மழை)
31. தை மழை (வேண்டாத மழை)
32. சுழி மழை ( பரவலாகப் பெய்யாமல் ஆங்காங்கே சுழி சுழியாகப் பெய்யும் மழை)
33. பட்டத்து மழை (விதைக்கும் காலத்தில் பெய்யும் மழை)
34. எல்லைக் கட்டிப் பெய்யும் மழை ( ஊரின் எல்லையோடு பெய்து நின்றுவிடும்)
35. மகுளிக்கும் மழை (பூமி உள்வாங்கிக் கொண்டது போக மண் நீரை வெளியே கக்கும் மழை)
36. வெள்ள மழை
37. பெருமழை
38. பருவ மழை
39. பதமழை (விதைப்புக்கான ஈரமுள்ள மழை)
40. உப்பு மழை (மதியத்துக்கு மேல் வீசும் உப்பங்காத்து காலையிலேயே வீச ஆரம்பித்தால் அன்றைக்கு நிச்சயம் மழை உண்டு என்பது)..

**படித்ததில் ரசித்தது!!**

" பறித்த மலரை
ஆண்டவனுக்குச்
சூட்டினாலென்ன?
கல்லறையில்
வைத்தாலென்ன?

மலருக்கென்னவோ
பறித்ததுமே வந்துவிட்டது
மரணம் ! "

பசும்பொன் தேவருக்கு பாலூட்டியவர் இஸ்லாமியதாய் என்பது நமக்குத்தெரியும்,ஆனால் பிராமண சமுதாயத்தைச்சேர்ந்த கவிஞர் வாலிக்கு பாலூட்டியவரும் இஸ்லாமியதாய்தான் என்பது நம்மில் எத்தனைபேருக்குத் தெரியும். "நான் - முத்தமிழ்ப் பாலருந்த , மூல காரணம் முஸ்லீம் பால்தான்!"
-சொன்னவர் வாலி ! "நினைவு நாடாக்கள்" – வாலியின் அனுபவங்கள் ...!

இதோ..வாலியின் வார்த்தைகளில் :
"என்னை ஈன்றெடுத்த ஓரிரு வாரங்களிலேயே -
என் அன்னைக்கு 'ஜன்னி' கண்டுவிட்டது; உடல் சீதளத்தின் உச்சத்தை எட்டி, உறுப்புகள் விறைத்துப்போய் - நினைவழிக்கும் கொடிய நோய் அது!
இந்த நிலையில் பச்சை மண்ணாகக்கிடந்த எனக்குப் பாலூட்டுதல் எங்ஙனம்?
அந்தக் காலத்தில் புட்டிப் பாலெல்லாம், புழக்கத்திற்கு வரவில்லை.
இந்த நிலையில் என் தந்தையுடன் பணி புரிந்த ,இப்ராஹிம் என்பவரின் இல்லத்தரசி அதே நேரத்தில் ஓர் அழகிய குழந்தையை ஈன்றெடுத்துஇருந்தார்.
அந்த இஸ்லாமிய மாது தான் - ஓரிரு மாதங்கள் எனக்குத் தாய்ப்பால் ஊட்டி -
இன்றளவும் நான் பிழைத்திருக்கக் காரணமானவர்கள்.
இன்று நான் - முத்தமிழ்ப் பாலருந்த , மூலக்காரணம் முஸ்லீம் பால்தான்!
.# சென்னைக்கு வந்தேன், சினிமா வாய்ப்புகள் தேடி.
அவ்வப்போது - கடனுக்கு சார்மினார் சிகரெட்டும், வெற்றிலை பாக்குப் புகையிலையும் தந்து -
'வாலி! நீ பெரிய ஆளானப்புறம் - இதுக்கான காசை, உங்கிட்ட வசூல் பண்ணிக்கிறேன்!' என்று -
சளைக்காமல் கடன் தந்து, என்னை ஆதரித்தது - 'வெற்றிலை பாக்குக் கடை' திரு.சுல்தான் அவர்கள்!
.# பன்னிரண்டு ஆண்டு காலம் - நான் நுங்கம்பாக்கம் மகாலிங்கபுரத்தில் குடியிருந்தேன் - மனைவி, மகனோடு.சினிமா வருமானம்தானே! முன்பின் வரும்; இருப்பினும், வாடகையை நான் கொடுக்கும்போது வாங்கிக்கொண்டு உதவியவர் -அந்த வீட்டின் உரிமையாளர் திருமதி.ஸுனைதா பேகம் அவர்கள்.
இப்படி - என் வாழ்வு வடிவு பெற -உளியாயிருந்து செதுக்கிய உள்ளங்கள் எல்லாம் -
முகமதியர் குலத்தில் முளைத்தவைதான் !"
# வாலியை வாசித்தபோது எனக்குத் தோன்றியது...!
மத நல்லிணக்கத்தை கட்டிக் காக்கும் மனிதர்கள் , அதை ஒரு கடமையாக செய்யவில்லை..!
இயல்பாகவே அவர்கள் அப்படித்தான் இருந்திருக்கிறார்கள் ...
இன்னமும் இருக்கிறார்கள்..!
# தொடர்கிறார் வாலி :
" ஒரு நாள் இசைஞானி இளையராஜா அவர்கள் ஒரு நூலைக் கொடுத்துப் படிக்கச் சொன்னார்.
அதுதான் திரு.மு.மேத்தா அவர்கள் வசன கவிதையாகப் புனைந்திருந்த நபிகள் நாயகம் அவர்களின் வரலாறு!
அதை - ஒரே இரவில் வாசித்து முடித்தேன். அற்புதமோ அற்புதம்! அதைப் படித்த பாதிப்பில்தான் - நான் 'அவதார புருஷ'னை - எழுதப் புகுந்தேன். திரு.மேத்தா, ஓர் இஸ்லாமியப் பெருமகன்."
# என்னது..? மு.மேத்தா ஒரு முஸ்லிமா...?
ஆச்சரியத்தோடு கூகிளைத் தேடினேன்.
ஆம்... மு.மேத்தாவின் முழுப் பெயர் ... முகமது மேத்தா..!
# மொத்தத்தில் .... வாலி , தன் வாழ்க்கையை சுருக்கமாக இப்படிச் சொல்கிறார் :
"ஆக - ஓர் இஸ்லாமிய விளக்குதான் , இன்னோர் இந்து விளக்கை ஏற்றிவைத்தது எனலாம்!"
.# இன்று ஒரு நல்ல தகவலைத் தந்ததற்கு நன்றி வாலி அவர்களே..!
இந்து-முஸ்லிம் ஒற்றுமை ஓங்கட்டும்
மனிதநேயம் தமிழ்மண்ணில் என்றும் நிலைக்கட்டும். - படித்ததில் பிடித்தது !!!

ஜெய் ஹிந்த் " என்ற மாபெரும் முழக்கம் கொண்ட இந்த வார்த்தையை உருவாக்கியவர் 1941ல் "ஆபித் ஹசன் சப்ரானி" எனும் இஸ்லாமியர்....

"இங்குலாப் ஜிந்தாபாத்" எனும் சொல்லை உருவாக்கியவர் "ஹஸ்ரத் மொஹானி" எனும் இஸ்லாமியர்....

"மா தேரே வதன் பாரத் மாத்தா கி ஜெய்" எனும் மாபெரும் எழுச்சிமிகு வார்த்தையை முதன் முதலில் உச்சரித்தவர் "அஸீமுல்லா கான்" எனும் இஸ்லாமியர்....

மகாத்மா காந்தியின் பெயரில் சொல்லப்படும் (QUIT INDIA) "குய்ட் இந்தியா" எனும் தலைப்பை உருவாக்கியவர் சுதந்திர போராட்ட வீரரும், 1942ல் பம்பாய் மேயருமாயிருந்த "யூசுப் மெஹர் அலி" எனும் இஸ்லாமியர்....

"சாரே ஜஹான்சே அச்சா, ஹிந்துஸ்தான் ஹமாரா" எனும் தேசப்பற்று மந்திரத்தை நமக்கு எழுதித்தந்தவர் "முஹம்மது இக்பால்" எனும் இஸ்லாமியர்....

சுதந்திர போராட்ட வீரர்களை உற்சாகத்தின் எல்லை வரை கொண்டு சென்ற, இன்றும் கேட்கும்போது நம்மை இந்தியனென்று கர்வம் கொள்ளச்செய்யும் "சர்பரோஷ் கி தமன்னா" என்கிற தேசபக்தி பாடலை 1921ல் எழுதியது உருது கவிஞர் "பிஸ்மில் அஸ்மாதி" எனும் இஸ்லாமியர்....

இந்திய முழுவதும் சுதந்திர போராட்டத்தில் வீர மரணமடைந்த சுதந்திர போராட்ட தியாகிகள் 95300 பேரின் பெயர்கள் "இந்திய கேட்டில்" செதுக்கி வைக்கப்பட்டுள்ளது...

இஸ்லாமியர்கள் : 61,395 பேர்
இந்துக்கள் : 25,895 பேர்
சீக்கியர்கள் : 8,050 பேர்